**<u>Deposition of Witness</u>**

<u>Chapter XXIII code of Criminal Procedure</u>

**<u>In the Court of District Munsif Cum Judicial Magistrate, Portonovo.</u>**

**Case Number – CC 151/2014**

| | | |
|---|---|---|
| **Name** | : | **ராஜீ , த–பெ., அந்தோனி** |
| **Village/Taluka** | : | **காஞ்சிபுரம்** |
| **Age** | : | **38** |
| **Status** | : | **P.W. 25** |

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 01.11.2021**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை –</u>** நான் காஞ்சிபுரத்தில் குடியிருந்து தட்டச்சராக பணிபுரிந்து வருகின்றேன். நான் கடந்த 2011 ம் ஆண்டு முதல் சென்னை தலைமை செயலகம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அலுவலகத்தில் தற்காலிக தட்டச்சராக பணிபுரிந்து வந்தேன். அருளப்பராஜ் என்ற நபர் தன்னை பி.டி.எஸ். மாணவர் என்று அமைச்சரிடம் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். மருத்துவமனைகளுக்கு நோயாளிகளுக்காக அமைச்சரிடமிருந்து பரிந்துரை கடிதங்கள் வாங்கிச்செல்வார். அப்படி ஒரு நாள் 29 அக்டோபர் 2013 ம் தேதி ஒரு லெட்டரை அருளப்பராஜ் அமைச்சர் லெட்டர் பேடில் மருத்துவமனைக்கு ராஜாராம் என்பவர் பெயரில் பரிந்துரைக்கடிதம் வாங்கிச்சென்றார். அந்த பரிந்துரைக்கடிதத்தினை நான் தான் பூர்த்தி செய்தேன். அந்த பரிந்துரைக்கடிதத்தில் உள்ள விவரங்களை அருளப்பராஜ் கூற நான் எழுதியிருந்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் பரிந்துரைக்கடிதம் நான் மேற்கூறிய கடிதம் தான். அதில் Cancelled என்று குறிப்பிடப்பட்டு இருப்பது என்னுடைய கையெழுத்து இல்லை. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் அந்த கடிதத்தில் உள்ள பின் பக்கத்தில் பிரிண்ட் செய்யப்பட்டுள்ள விவரங்கள் எங்கள் அலுவலகத்தில்

கொடுக்கப்பட்டது அல்ல. அந்த பரிந்துரைக்கடிதம் **அ.சா.ஆ. 84** ஆகும். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். எனக்கு அருளப்ப ராஜை அடையாளம் தெரியும். அவர் நீதிமன்ற வளாகத்தில் உள்ளாரா என்றால் ஆஜர் எதிரிகளில் வலது பக்கத்தில் முதலாவதாக நிற்கும் நபர் தான் அருளப்பராஜ் ஆவார்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** நான் சென்னை தலைமை செயலகத்தில் பணிபுரிந்து வந்தேன். 3, 4 நபர்கள் நாங்கள் அந்த பிரிவில் தட்டச்சராக பணிபுரிந்து வந்தோம். ஒரு நாளைக்கு இது போல சிபாரிசுக்கடிதம் சுமார் 50 வரும் என்றால் சரிதான். மருத்துவமனைக்கு சம்பந்தப்பட்ட கடிதங்கள் மட்டும் தான் வருமா என்றால் அதனை அந்த அந்த அமைச்சர்கள் பார்த்துக்கொள்வார்கள் எங்கள் பரிவிற்கு மருத்துவமனைக்காக மட்டும் தான் வரும். பரிந்துரைக்கடிதத்தினை எழுதியது நான் தான். போலிசார் தான் எங்களிடம் வந்து இந்த பரிந்துரைக்கடித்தினை வாங்கி வந்தார்கள் என்றால் சரியல்ல, அருளப்ப ராஜ் தான் வந்து வாங்கிவந்தார். Cancelled என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை நான் எழுதவில்லை. என்னையும், மக்கள் நலத்துறை அமைச்சரையும் இந்த வழக்கில் எதிரிகளாக சேர்க்கவேண்டும் என்றாலும் யார் வந்து கேட்டாலும் பரிந்துரைக்கடிதத்தினை கொடுத்துவிடுவார்களா என்றால் சரியல்ல. ஒரு நாளைக்கு சுமார் 50லிருந்து 100 வரை எங்கள் அலுவலகத்திற்கு வரும் என்றாலும் அதனை சரிபார்க்க முடியாது என்றாலும் சரிதான். போலிசார் ஒரு படிவத்தினை தயாரித்து என்னிடம் எதிரிகள் கொடுத்ததாக கூறி இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**3, 4, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** அருளப்பராஜ் என்னிடம் கடிதம் வாங்கி சென்ற எத்தனை நாட்கள் கழித்து போலிசார் என்னை விசாரித்தனர் என்றால் 1 மாதம் கழித்து இருக்கும். 29.10.2013 தேதியிட்ட கடிதம் வாங்கிக்கொண்ட 1 மாதத்திற்குள் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். தேதி எனக்கு சரியாக ஞாபகமில்லை. போலிசார் கூறியதின் பெயரில் தான் நான் தற்பொழுது அருளப்பராஜை அடையாளம் காண்பிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**Deposition of Witness**

Chapter XXIII code of Criminal Procedure

**In the Court of District Munsif Cum Judicial Magistrate, Portonovo.**

**Case Number – CC 151/2014**

**Name** : **கருணாகரன், த–பெ. எத்திராஜ்**
**தலைமைக்காவலர் 1674,**
**தூக்கணாம்பாக்கம் காவல் நிலையம்,**
**கடலூர்**

**Age** : **44**

**Status** : **P.W. 26**

**Solemnly Affirmed in accordance with the Provision Act X of 1873 of the day of 01.11.2021**

**அரசு தரப்பில் முதல் விசாரணை –** நான் தற்பொழுது தலைமைக்காவலராக தூக்கணாம்பாக்கம் காவல் நிலையம், கடலூரில் பணிபுரிந்து வருகின்றேன். கடந்த 2013 ம் ஆண்டு நான் மாவட்ட குற்றப்பிரிவில் முதல் நிலைக்காவலராக 1674 ஆக பணியாற்றினேன். அங்கு என்னுடைய பணியின் தன்மையானது மாவட்ட குற்றப்பிரிவில் சைபர் கிரைம் பிரிவில் குற்ற வழக்கில் சம்பந்தப்பட்ட சி.டி.ஆர் சந்தேகப்படும் நபரின் மீது விசாரணை அதிகாரிக்கு உறுதுணையாக இருந்து அவர்கள் கேட்கும் செல்போன் எண்களின் Call details எடுத்துத் தருவது போன்ற பணி செய்வது ஆகும். இந்த வழக்கு சம்பந்தமாக என்னிடம் சந்தேக்கப்படும் நபரான அருளப்பராஜ் என்பவரின் செல்போன் எண்ணான 8148998879, என்ற எண்ணை கொடுத்தார்கள். சம்பந்தப்பட்ட சி.டி.ஆர். அந்த செல் பேசி எண்ணின் Call details Record or Call Data Register ல் சம்பந்தப்பட்ட நபர் சம்பந்தப்பட்ட தேதியான 29.10.2013 தேதியில்

எங்கு இருந்தார் என்று என்னிடம் பார்க்க சொன்னார்கள். சம்பவ தேதியில் அவருடைய லொக்கேஷன் சென்னையில் உள்ள தம்புச்செட்டி தெருவில் உள்ள கோவிந்த லோடஸ் ரூபி என்ற டவர் லொகேஷன் மாலை 4.10 மணி வரை காண்பித்தது. அதன்பிறகு 5.30 மணிக்கு மேல் தமிழ்நாடு மின்சார வாரியம், துணை மின் நிலையம், பீச்ரோடு, தலைமை செயலகத்தில் காண்பித்தது. அந்த லொக்கேஷனில் ஒரு Fax அனுப்பப்பட்டு இருந்தது. அதனையும் செக் செய்து அது தொடர்பாக 04142230555 என்ற எண்ணிற்கும் கடலூர் கலெக்டர் அலுவலகத்திற்கு Fax அனுப்பப்பட்டு இருந்தது. அந்த Fax அனுப்புவதற்கு முன்பு 1 ரூ. கால் போனில் இருந்து 8682907704 என்ற எண்ணிற்கு போன் செய்யப்பட்டு சொல்லிவிட்டு அதன் பிறகு 04142230555 என்ற எண்ணிற்கும் கடலூர் கலெக்டர் அலுவலகத்திற்கு Fax அனுப்பப்பட்டு இருந்தது. அந்த Fax Receive செய்யப்பட்டு இருந்தது. இதனை பரிசீலித்து பார்க்கும் பொழுது சரியாக இருந்தது. நான் மொத்தம் 10 எண்களை பரிசோதனை செய்தேன். அந்த எண்கள் 8148998879, 04142230555, 9005000907, 04442013929, 8682907702, 9789470873, 9600582984, 9791712211, 7373827984 ஆகிய எண்களை கொடுத்தனர். அதில் அருளப்பராஜ் என்பவரின் என் மட்டும் சென்னை லொக்கேஷனில் காண்பித்தது. Call Data Register சம்பந்தப்பட்ட நெட் ஒர்க்கின் நோடல் ஆபிசர்களிமிருந்து வரப்படும். வழக்கமாக Call Data Register பற்றிய தகவல்கள் நோடல் ஆபிசர்களிமிருந்து எங்களுடைய மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பப்படும். இது சம்பந்தமாக விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** நான் கூறியுள்ள 10 எண்களுக்கான உரிமையாளர்கள் யார் யார் என்பது பற்றி எனக்குத்

தெரியும். ஒவ்வொரு செல்போன் எண்ணிற்கும் யார் உரிமையாளர் என்ற விவரத்தினை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர்களுடைய முகவரியையும் சேர்த்து தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 04142230555 என்பது கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் எண் ஆகும். பீச்ரோட்டில் உள்ள குறிப்பிட்டுள்ள செல் போன் எண்ணின் உரிமையாளர் பெயர் வெல்கம் டெலிலிங்க்ஸ் என்று உள்ளது. அதன் உரிமையாளர் பெயரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். டி.சி.பி. காவல் நிலைய ஆய்வாளர் தூண்டுதலின் பெயரில் நான் பொய்யாக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் உயர்அதிகாரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**3,4,5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

**அரசு தரப்பில் மறு விசாரணை –** இல்லை.